1992 மார்ச் 24]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 329. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

329—

இராமநாதபுரம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை

*1660—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :

தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு 6 நவீன அரிசி ஆலைகள் அமைப்பதற்காக அரசு உத்திரவு இட்டது. அதற் காக இராமநாதபுரம் மற்றும் திருவாடானை தொகுதியில் திருவேகம்புதூர் என்ற இடத்தில் இடம் எல்லாம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அங்கே கட்டுவதற்கான ஆய்வுப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் கடந்த தி.மு. கழக ஆட்சியில் அது எதிர்க்கட்சி தொகுதி என்ற ஒரே காரணத்திற்காக அங்கே தண்ணீர் வசதி இல்லை என்று சொல்லி அந்தத் திட்டத்தைக் கைவிட்டது. அந்தத் திட்டம் பிறகு பரமக்குடியில் கட்டுவதற் காக மாற்றப்பட்டது. ஆனால் பரமக்குடியும் எதிர்க்கட்சி தொகுதி என்ற காரணத்தால் அங்கேயும் தி.மு.க. அரசால் இந்தத் திட்டம் கை விடப்பட்டது. வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூட அதற்காக சிபாரிசு செய்தார்கள். கிட்டத்தட்ட 200 பேருக்கு மேல் படிப்பு அறிவு இல்லாத தாழ்த்தப்பட்ட குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்களை வேலையில் அமர்த்தும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985ல் 6 நவீன அரிசி ஆலைகள் கட்டலாம் என்று அரசு முடிவு எடுத்தது. அதிலே 4 ஆலைகள் மானாமதுரை போளூர், நெய்வேலி, எருக்கூர்—பகுதி 2 ஆகிய இடங்களில் ஆலைகளைக் கட்டி விட்டார்கள். அதற்குப் பிறகு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய நிர்வாகம் இருக்கிற ஆலைகளே தமிழகத்திற்கு போதுமானது, போதுமான அரைவைத் திறன் கொண்டது என்ற காரணத்தால் தேவையில்லை என்று முடிவு எடுத்து விட்டார்கள்.

முற்பகல் 10–15.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற மாவட்டம். அங்கே நெல் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. ஆகவே அங்கே நவீன அரிசி ஆலை அவசியம் தேவைப்படுகிறது. ஒரு இடத்திலே நவீன அரிசி ஆலை, அமைப்பதற்கு என்னென்ன அடிப்படைத் தேவைகள் தேவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு 20 நவீன ஆலைகள் இருக்கின்றன. தனியார் துறையிலே நிறைய ஆலைகள் இருந்து கொண்டிருக்கின்றன். நம் தமிழ்நாட்டில் விளைகின்ற நெல்லை அரைவை செய்வதற்குப் போதுமான அரைவைத் திறன் ஏற்கனவே இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு உரிய நேரத்தில் அங்கே போய் அரிசி சேர்வதற்கு சில பிரச்சினைகள் இருந்து நான் மாவட்டத்திற்குச் சென்ற போது அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள், அங்கு தனியாக கிடங்குகளை ஏற்படுத்த வேண்டும் என்று. மாவட்டத்திற்கு என்ன தேவையோ அதை இந்தப் புரட்சித் தலைவியின் அரசு உடனடியாக செய்து முடிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980–ல் மத்திய அரசு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு வெடி மருந்து தொழிற்சாலை துவங்க இருப்பதாக திட்டத்தை அறிவித்தது. ஆனால் அந்தத் திட்டம் மாற்றப்பட்டது. அதுபோன்று 1985-ல் இராமநாதபுரம் மாவட்டத்

தில் ஒரு நவீன அரிசி ஆலை துவக்கப்படவிருந்ததும் கை விடப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின் தங்கியது. போட்ட திட்டங்களையாவது கைவிடாமல் நடைமுறைப்படுத்த வேண்டும். எங்கள் இதய தெய்வத் தின் இந்த ஆட்சிக் காலத்தில் அங்கு நவீன அரிசி ஆலை இல்லை என்ற குறையை நீக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் ஏற்கனவே மானா மதுரையில் மாதத்திற்கு 2,500 மெட்ரிக் டன் அரவைத்திறன் கொண்டுள்ள ஒரு ஆலை அங்கே நிறுவப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்தப் பகுதியில் ஒரு ஆலை அப்போது இராமநாதபுரம் மாவட்டமாக இருந்து அங்கே கட்டி முடித்திருக்கிறோம். இன்னொன்றைக் கட்டுகின்றபோது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அடுத்து ஒரு அரிசி ஆலையைத் துவங்குவது என்று முன் வந்தால் இராமநாதபுரத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 330. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

330—

நிலக்கோட்டை தொகுதியில் தொழிற்பயிற்சி மையம்

*5322—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டை தொகுதிக்கு ஒரு தொழிற்பயிற்சி மையம் வேண்டுமென்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) ஆம்,

(ஆ) கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.